| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|
| 47 | றெயில்வேக்குச் சேமிக்கப்பட்ட நிலம் | 9 3 7 |
| 47½ | றோட்டு | 0 0 2 |
| | | 9 3 9 |

எல்லைகளாவன: வடக்கு-முடியால் உரித்தாடும் கப்பிலிகந்தேமுகலான, டொன் ஜுவானிஸ் ஜயசுந்தர உரித்தாடும் மோதரமுல்லவத்த, முடியால் உரித்தாடும் பள்ளிமுலவத்த, கெருத்முதியான்செலாகே முதியான்சேயும் மறுபேரு முரித்தாடும் பெலிகாமுலவியத்தேகும்புற, எம். டி. எஸ். எஸ். சிறிவர்த்தன கோறளையும் மறுபேரு முரித்தாடும் அஸ்வெத்துமேவத்த, முடியால் விற்கப்பட்ட தெகலஸ்சேவத்த, முடியால் விற்கப்பட்ட பறகாமடயேன, முடியால் விற்கப்பட்ட தெயட்டகொல்லவத்த, முடியால் விற்கப்பட்ட பரகாமடயேன; கிழக்கு-கபுவருளக் கிராம எல்லை; தெற்கு-முடியால் விற்கப்பட்ட பாறகாமடவத்த, முடியால் உரித்தாடும் பாறகாமடவத்த, முடியால் விற்கப்பட்ட பாறகாமடயேன, குருநாக்கலிலிருந்து இரியுலலவுக்குப் போகும் றோட்டு; மேற்கு-உடுக்காக்கோறளை தெற்கு எல்லை.

IX.—பிரதம படம் 431.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|
| 48 | றோட்டு | 2 2 33 |

எல்லைகளாவன: வடக்கு-முடிக்குரிய றெயில்வேய்க்குச் சேமிக்கப்பட்ட நிலம், முடியால் விற்கப்பட்ட பாறகாமடயேன, முடியால் உரித்தாடும் பாறகாமடவத்த, முடியால் விற்கப்பட்ட பாறகாமடவத்த, ஜயசுந்தர முதியான்செலாகே புஞ்சி இரிபண்டா உரித்தாடும் பரகாமடயேன; கிழக்கு-கபுவருளக் கிராம எல்லை; தெற்கு-முடியால் விற்கப்பட்ட பாறகாமடயேன, முடியால் உரித்தாடும் பாறகாமடவத்த, முடியால் விற்கப்பட்ட ஓயாபடவத்த, டொன் ஜுவானிஸ் ஜயசுந்தர உரித்தாடும் ஓயாபடவத்த, டொன் ஜுவானிஸ் ஜயசுந்தரவும் மறுபேரு முரித்தாடும் ஓயபடவத்த; மேற்கு-உடுக்காகோறளை தெற்கு எல்லை.

X.—பிரதம படம் 431.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|
| 49 | மகாஓயா (பகுதி) | 10 0 1 |

எல்லைகளாவன: வடக்கு-டொன் ஜுவான் ஜயசுந்தரவும் மறுபேரு முரித்தாடும் ஓயாபடவத்த, முடியால் விற்கப்பட்ட ஓயாபடவத்த, முடியால் உரித்தாடும் பரகாமடவத்த, முடியால் விற்கப்பட்ட பரகாமடயேன; கிழக்கும் தெற்கும் மேற்கும்-மகா ஓயாவின் பகுதி.

[Kurunegala S. O. 34, 1914.]

---

[Tenders for provisioning Hospitals, Dambulla, Deltota, Dolosbage, &c.]

பின்னால் வரும் அட்டவணையிற் காணப்படும் ஆசுபத்திரிகளுக்கு 1914 ம் ஆண்டு ஐப்பசி௴ 1 ந் திகதி தொடக்கம் 1915 ம் ஆண்டு புரட்டாசி௴ 30 ந் தேதி வரைக்கும் தேவையான சாப்பாட்டு சாமான்களை கொந்திருத்து ஒப்பந்தம் செய்ய விருப்பமுள்ளவர்கள் ஒப்பந்தக் கேள்விக்கடதாசி அனுப்பும்படி இத்தால் கேட்கப்பட்டிருக்கின்றது.

2. கொந்திருத்து ஒப்பந்தகேள்விகளை இரண்டு கொப்பிகளில் எழுதி ஒரே தபாலுறையில் வைத்து முத்திரையிட்டு "கொந்திருத்து ஒப்பந்த விசாரணைச்சங்கத்தலைவர் (The Chairman of the Tender Board) அரசிறைவருமானத் தலைவர் கந்தோர் (Office of the Controller of Revenue) கொழும்பு" என்று மேல்விலாசமும் எழுதி அனுப்பல் வேண்டும்.

3. ஒப்பந்தக் கேள்விக்கடுதாசிகளை அரசிறைவருமானத்தலைவர் கந்தோரில் இதற்காக வைக்கப்பட்டிருக்கும் பெட்டியிற் போடவேண்டும் அல்லது தபால்மார்க்கமாய் அங்கே அனுப்பவேண்டும்.

4. ஒப்பந்தக் கேள்விக்கடுதாசிகள் அனுப்பப்படும் உறையின் புறத்தில் இடதுகை மேல்மூலையில் "ஆசுபத்திரிக்கு சாப்பாட்டுச்சாமான்கள் கொடுத்தற்காக அனுப்பப்படும் ஒப்பந்தக் கேள்விக்கடுதாசி" என்று எழுதல் வேண்டும். கேள்விக்கடுதாசிகள் அரசிறைவருமானத்தலைவர் கந்தோரில் 1914 ம் ௵ பங்குனி௴ 3 ந் தேதி மத்தியானத்துக்குப் பிந்தாமல் சேரல்வேண்டும்.

5. அச்சிட்ட கொந்திருத்து ஒப்பந்தக் கேள்விக்கடுதாசிகளில் மாத்திரம் ஒப்பந்தக் கேள்விகள் எழுதி அனுப்ப வேண்டும். இந்தக் கேள்விப்பத்திரங்கள் கொழும்பு பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசில் பெற்றுக்கொள்ளலாம். அச்சிட்டு இதற்கென்று நியமிக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரத்தில் எழுதப்படாத கேள்விகள் கவனிக்கப்படமாட்டா. இந்தக் கேள்விப்பத்திரத்தில் யாதேனும் மாற்றங்கள்செய்தால் அம்மாற்றங்களுக்கு ஒப்பந்தக் கேள்விக்காரன் கையொப்பமிடல் வேண்டும். அப்படிச் செய்யத் தவறினால் கேள்வி சரியீனமாகக்கண்டு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

6. அச்சிட்ட ஒப்பந்தக் கேள்விப்பத்திரம் பெறவிரும்புவோர் பின்வரும் அட்டவணையின்படி முற்பணம் கச்சேரியில் கட்டிப் பற்றுச்சீட்டுக் கொண்டுவரல் வேண்டும். கொந்திருத்துக் கேள்விகள் எழுதியனுப்பினதன்மேல் யாராகுதல் கொந்திருத்தைக் கையேற்க அல்லது தக்கபிணை கொடுக்கத் தவறினால், அவரால் முற்பணமாகக் கட்டப்பட்ட காசு முடிக்காய்விடும். அப்படிக் கட்டப்பட்ட கொந்திருத்துக்காரனின் பேர் கவண்மேந்தில் யாதொரு கொந்திருத்தும் எடுக்க ஏலாமல் அரசாட்சியாரின் பத்திரிகையில் (Defaulting List) போடப்படும், கொந்திருத்து ஒப்பந்தந்தீர்ந்து ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒப்பந்தக்காரன் கையொப்பம் வைத்ததன்மேல், ஒத்துக்கொள்ளப்படாத மற்றக் கொந்திருத்துக் கேள்விக்காரர் கட்டிய பணத்தொகை முழுவதும் அவர்களுக்குக் கொடுக்கப்படும். பிரதம சிவில் மெடிக்கல் ஆபிசர் கந்தோரில் முற்பணம் ஏற்கப்படமாட்டாது.

7. சாமான் மாதிரிகள் கேட்கும்போது கொடுக்கவேண்டும்.

8. ஏற்றுக்கொள்ளப்பட்ட கொந்திருத்து ஒப்பந்தக்காரன் பின்வரும் அட்டவணையின்படி பணப்பிணை கொடுக்கவும் ஒப்பந்தத்தைச்சேர்ந்த உறுதிக்குக் கையொப்பம் வைக்கவும் வேண்டும். கேள்விப்பத்திரத்தின்பேரால் முற்பணமாகக் கட்டிய தொகை பிணையில் ஓர் பகுதியாகக் கவனிக்கப்படும். இன்னும் தேவையான விவரங்கள் பிரதான சிவில் மெடிக்கல் ஆபீசரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

9. மேற்கூறிப்போந்த பொருத்தங்கள் எல்லாவற்றிற்கும் அமையாத ஒப்பந்தக் கேள்வி ஒன்றும் அங்கீகரிக்கப்படமாட்டாது.

10. ஒப்பந்தக்கேள்விகளில் யாதேனும் ஒன்றையாவது அல்லது முழுமையையாவது ஏற்றுக்கொள்ளாது தள்ளும் உரித்தும் அவைகளில் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் உரித்தும் கவர்ணமேந்தாருக்குண்டு.

11. இன்னும் தேவையான விவரங்களை கொழும்பு பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

(கையொப்பம்) ஜீ. ஜே. றதர்வட்,
பிரதம சிவில் மெடிக்கல் ஆபிசருக்காக.

கொழும்பு, 1914 ம் ஆண்டு மாசிமீ 6 ந் உ.

அட்டவணை.

| ஆசுப்பத்திரியின் பெயர். | சாப்பாட்டுச்சாமான்களின் விவரம். | முற்பணத்தின் தொகை | பணப்பிணையின் தொகை |
|---|---|---|---|
| | | ரூ. | ரூ. |
| தம்பளை ஆசுப்பத்திரி | சமைக்கப்பட்ட சாப்பாடு, பாலுடன் | 200 | 400 |
| தெல்தோட்டை ஆசுப்பத்திரி | ஷை | 200 | 400 |
| தொலஸ்பாகே ஆசுப்பத்திரி | ஷை | 100 | 200 |
| கெலபொக்கே ஆசுப்பத்திரி | ஷை | 200 | 400 |
| மஸ்கேலியா ஆசுப்பத்திரி | ஷை | 200 | 400 |
| மாத்தளை ஆசுப்பத்திரி | ஷை | 300 | 600 |
| நாவலப்பிட்டி ஆசுப்பத்திரி | ஷை | 300 | 600 |
| புஸ்ஸலாவை ஆசுப்பத்திரி | ஷை | 100 | 200 |
| றம்படை ஆசுப்பத்திரி | ஷை | 200 | 400 |
| தெல்டேனியா ஆசுப்பத்திரி | ஷை | 100 | 200 |
| உடபுஸ்ஸலாவை ஆசுப்பத்திரி | ஷை | 100 | 200 |

---

[Tenders for provisioning Hospitals, Dikoya, Dimbulla, Gampola, &c.]

பின்னால் வரும் அட்டவணையிற் காணப்படும் ஆசுப்பத்திரிகளுக்கு 1914 ம் ஆண்டு ஐப்பசிமீ 1 ந் திகதி தொடக்கம் 1915 ம் ஆண்டு புரட்டாசிமீ 30 ந் திகதி வரைக்கும் தேவையான சாப்பாட்டு சாமான்களை கொந்திருத்து ஒப்பந்தம் செய்ய விருப்பமுள்ளவர்கள் ஒப்பந்தக் கேள்விக்கடதாசி அனுப்பும்படி இத்தால் கேட்கப்பட்டிருக்கின்றது.

2. கொந்திருத்து ஒப்பந்தக் கேள்விகளை இரண்டு கொப்பிகளில் எழுதி ஒரே தபாலுறையில் வைத்து முத்திரையிட்டு, "கொந்திருத்து ஒப்பந்த விசாரணைச் சங்கத்தலைவர் (The Chairman of the Tender Board) அரசிறைவருமானத்தலைவர் கந்தோர் (Office of the Controller of Revenue) கொழும்பு" என்று மேல்விலாசமும் எழுதி அனுப்பல் வேண்டும்.

3 ஒப்பந்தக் கேள்விக்கடதாசிகளை அரசிறைவருமானத்தலைவர் கந்தோரில் இதற்காக வைக்கப்பட்டிருக்கும் பெட்டியிற் போடவேண்டும் அல்லது தபால்மார்க்கமாய் அங்கே அனுப்பவேண்டும்.

4. ஒப்பந்தக் கேள்விக்கடுதாசிகள் அனுப்பப்படும் உறையின் புறத்தில் இடது கை மேல்மூலையில் "ஆசுப்பத்திரிக்குச் சாப்பாட்டுச் சாமான்கள் கொடுத்தற்காக அனுப்பப்படும் ஒப்பந்தக் கேள்விக்கடதாசி" என்று எழுதல் வேண்டும். கேள்விக்கடுதாசிகள் அரசிறைவருமானத்தலைவர் கந்தோரில் 1914 ம் ஆண்டு பங்குனிமீ 10 ந் தேதி மத்தியானத்துக்குப் பிந்தாமல் சேரல்வேண்டும்.

5. அச்சிட்ட கொந்திருத்து ஒப்பந்தக் கேள்விக்கடுதாசிகளில் மாத்திரம் ஒப்பந்தக் கேள்விகள் எழுதி அனுப்பவேண்டும். இந்தக் கேள்விப்பத்திரங்கள் கொழும்பு பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசில் பெற்றுக்கொள்ளலாம். அச்சிட்டு இதற்கென்று நியமிக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரத்தில் எழுதப்படாத கேள்விகள் கவனிக்கப்படமாட்டா. இந்தக் கேள்விப்பத்திரத்தில் யாதேனும் மாற்றங்கள் செய்தால் அம்மாற்றங்களுக்கு ஒப்பந்தக்கேள்விக்காரன் கையொப்பமிடல் வேண்டும். அப்படிச் செய்யத் தவறினால் கேள்வி சரியீனமாகக்கண்டு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

6. அச்சிட்ட ஒப்பந்தக் கேள்விப்பத்திரம் பெறவிரும்புவோர் பின்வரும் அட்டவணையின்படி முற்பணம் கச்சேரியில்கட்டிப் பற்றுச்சீட்டுக் கொண்டுவரல் வேண்டும். கொந்திருத்துக் கேள்விகள் எழுதியனுப்பினதன்மேல் யாராகுதல் கொந்திருத்தைக் கையேற்க அல்லது தக்கபிணை கொடுக்கத்தவறினால், அவரால் முற்பணமாகக் கட்டப்பட்ட காசு முடிக்காய்விடும். அப்படி கட்டப்பட்ட கொந்திருத்துக்காரனின் பேர் கவண்மேந்தில் யாதொரு கொந்திருத்தும் எடுக்க ஏலாமல் அரசாட்சியாரின் பத்திரிகையில் (Defalting List) போடப்படும், கொந்திருத்து ஒப்பந்தந்தீர்ந்து ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தக்காரன் கையொப்பம் வைத்ததன்மேல், ஒத்துக்கொள்ளப்படாத மற்றக் கொந்திருத்துக் கேள்விக்காரர் கட்டிய பணத்தொகை முழுவதும் அவர்களுக்குக் கொடுக்கப்படும். பிரதம சிவில் மெடிக்கல் ஆபிசர் கந்தோரில் முற்பணம் ஏற்கப்படமாட்டாது.

7. சாமான் மாதிரிகள் கேட்கும்போது கொடுக்கவேண்டும்.

8. ஏற்றுக்கொள்ளப்பட்ட கொந்திருத்து ஒப்பந்தக்காரன் பின்வரும் அட்டவணையின்படி பணப்பிணை கொடுக்கவும் ஒப்பந்தத்தைச்சேர்ந்த உறுதிக்குக் கையொப்பம் வைக்கவும் வேண்டும். கேள்விப்பத்திரத்தின்பேரால் முற்பணமாககக்கட்டிய தொகை பிணையில் ஓர் பகுதியாகக் கவனிக்கப்படும். இன்னும் தேவையான விவரங்கள் பிரதான சிவில் மெடிக்கல் ஆபீசரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

9. மேற்கூறிப்போந்த பொருத்தங்கள் எல்லாவற்றிற்கும் அமையாத ஒப்பந்தக்கேள்வி ஒன்றும் அங்கீகரிக்கப்படமாட்டாது.

10. ஒப்பந்தக்கேள்விகளில் யாதேனும் ஒன்றையாவது அல்லது முழுமையையாவது ஏற்றுக்கொள்ளாதிருக்கும் உரித்தும் அவைகளில் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் உரித்தும் கவர்ணமேந்தாருக்குண்டு.

11. இன்னும் தேவையான விபரங்களை கொழும்பு பிரதான சிவில் மெடிக்கல் ஆபிசரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

(கையொப்பம்) ஜீ. ஜே. றதர்போட்,
பிரதம சிவில் மெடிக்கல் ஆபிசருக்காக.

கொழும்பு, 1914 ம் ஆண்டு மாசிமீ 16 ந் உ.

அட்டவணை.

| ஆசுப்பத்திரியின் பெயர். | | சாப்பாட்டுச்சாமான்களின் விவரம். | | முற்பணத்தின் தொகை ரூ. | | பணப்பிணையின் தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|
| டிக்கோயா ஆஸ்பத்திரி | .. | பாலில்லாமல் | .. | 500 | .. | 1,000 |
| டிம்புலை ஆஸ்பத்திரி | .. | ஷை | .. | [illegible]00 | .. | 400 |
| கம்பளை ஆஸ்பத்திரி | .. | ஷை | .. | 200 | .. | 400 |
| கண்டி ஆஸ்பத்திரி | .. | ஷை | .. | 500 | .. | 1,000 |
| வின்டுலை ஆஸ்பத்திரி | .. | ஷை | .. | 300 | .. | 600 |
| மத்துறட்டை ஆஸ்பத்திரி | .. | ஷை | .. | 200 | .. | 400 |
| நுவரெலி ஆஸ்பத்திரி | .. | காசு கொடுத்திருப்பவர்களுக்கு பாலில்லாமலும் சமையாமலும் மற்றவர்களுக்கு பாலில்லாமலும் சமைத்தும் | .. | 250 | .. | 500 |

[Tenders for repairing Salt Stores Nos. 1, 3, 4, 5, 7, 13, 16, 17, and 18 of the Nachchikali Saltern, Puttalam.]

" நாச்சிக்களியிலிருக்கும் 1, 3, 4, 5, 7, 13, 16, 17, 18 ம் நொம்பர் உப்பு குதங்களை பழுதுபார்க்கவும் திரும்ப கட்டவும் " என்று மேல் உறையில் எழுதி முத்திரிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களை உடன்படிக்கைபண்ணிக்கொள்ள விருப்பமுள்ளவர்களிடமிருந்து புத்தளம் உதவி அரசாட்சி ஏசண்டுத்துரையவர்களால் 1914 ம் ஆண்டு பங்குனிமாதம் 6 ந் திகதி 1 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

விபரம்.

3, 4, 7 ம் நொம்பர் உப்பு குதங்களின் கூரையின் மேல் கட்டிடத்தையும் சுவர்களையும் எடுத்து உபயோகிக்ககூடிய மரங்களைப் பாவித்து திரும்ப கட்டவேண்டும்.

கூரைகள் புதிய ஓடுகளால் திரும்ப வேய வேண்டும்.

ஓடுகள் ஐந்து அங்குல தூரத்துக்கு இடைவிட்டு வேய வேண்டும்.

உழுத்ததும் பழுதானதுமான மரங்கள் அவையாவன கப்புகள், வளைகள், முகட்டு வளைகள், பக்கவளைகள், பூட்டுகள், வரிச்சுகள், சிறாய்கள் இவைகளை எடுத்துப்போட்டு புதியதும் பெலத்த மரங்கள் போடப்பட வேண்டும்.

புதிய பூட்டுகள் கூரைக்குமேல் பதினெட்டிஞ்சி தூரத்துக்கு இடைவிட்டு பாரத்துக்குப் போடப்பட வேண்டும்.

1, 5, 13, 16, 17, 18 ம் நொம்பர் உப்பு குதங்களின் சிவரின் மோதல்களை நேர்த்தியாக பழுதுபார்த்துப் பெலப்படுத்திப் புதிய ஓடுகளால் சிவர்கள் அடைக்கவேண்டும்.

உப்பு குதங்களின் உட்புறம் புதிய ஓடுகளால் ஏரிசா தூக்கப்பட வேண்டும்.

நிறுவை மண்டபங்களும் நேர்த்தியாக பழுதுபார்த்து கட்டை வேலிகள் திரும்ப அடைக்க வேண்டும்.

நிறுவை மண்டபத்தினதும் உப்பு குதத்தினதும் தரைகள் தேவையான இடங்களில் களியால் உயர்த்தி நன்றாய் மொங்கா னடிக்கவேண்டும்.

குறுக்கு தீராந்திகளையும் முகட்டு தீராந்திகளையும் பக்க வளைகளையும் சேர்த்து ஆணியடித்து கயிற்றால் கட்டவேண்டும்.

திரும்ப கட்டவேண்டிய குதங்களின் சிவர்களுக்கு தம்மனுசிராய் இரண்டு அடி தாள்வு குறைவில்லாமல் புதிதாய் நடவேண்டும்.

தேவையான இடங்களில் குதங்களின் கதவுகள் பழுதுபார்த்து புணைச்சலும் கொளுக்கிகளும் போடவேண்டும்

கேள்விக்காரர் கவனிக்கவேண்டிய ஏற்பாடுகள்.

1. கேள்விக்காரர் 1914 ம் ஆண்டு பங்குனிமாதம் 5 ந் திகதியலன்று அல்லது அதற்குமுன் புத்தளம் கச்சேரியில் ரூபாய் 20 கட்டவேண்டும். உதவி அரசாட்சி ஏசண்டுத்துரையால் நியமிக்கும் நியாயமான காலத்துக்குள் பொருத்த உடன்படிக்கை பண்ணிகொள்ளத்தவறினால் இந்தக் கட்டின பணம் அரசாட்சிக்கு பறிமுதலாக்கப்படும்.

2. அறிவித்தல் அல்லது கடிதங்களை பெற்றுக்கொள்ளுகிறதற்காக கேள்விக்காரர் புத்தளத்தில் ஓரிட விலாசம் கொடுக்கவேண்டும்.

3. வேலை நடத்த முற்பணம் கொடுக்கப்படமாட்டா.

4. கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொண்டதென் றறிவித்தல் கிடைத்ததின்பின் ஏழு கிழமைக்குள் இந்த வேலையை செய்து முடிக்கவேண்டும்.

5. இவைகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரங்களை புத்தளம் உப்புத்துரையவர்களிடம் வினவி அறிந்து கொள்ளலாம்.

எஸ். எம். பி. வேந்தர்கோன்,
உதவி அரசாட்சி ஏசண்டருக்காக.

புத்தளம் கச்சேரி,
1914 ம் ஆண்டு மாசிமாதம் 12 ந் திகதி.

[Tenders for weighing and transporting Salt for Purchasers, Puttalam.]

" உப்பு விலைக்கு வாங்குபவர்களுக்கு நிறுத்து ஏற்றுமதி பண்ணிக்கொடுக்க " வென்று மேல்உறையில்எழுதி முத்திரிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களை உடன்படிக்கைபண்ணிக்கொள்ள விருப்பமுள்ளவர்களிடமிருந்து புத்தளம் உதவி ஏசன்றுத்துரையவர்களால் 1914 ஆண்டு பங்குனிமீ 16 ந் தேதி பகல் 12 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும், அஃதாவது :—

1. புத்தளம் உப்பு டிப்பாற்மேந்தில் விற்கப்படும் உப்பை உதவி ஏசன்றுத்துரையவர்க ளனுமதிப்படி பாதைக்காரர்களுக்கும் கரத்தைக்காரர்களுக்கும் நிறுத்து ஒப்புக்கொடுக்கும் பணிவிடை—

(1) 1914 ம் ஆண்டு வைகாசிமாதம் 23 ந் தேதி துவக்கம் 1915 ம் ஆண்டு வைகாசிமாதம் 22 ந் தேதி வரைக்கும்.

கேள்விக்காரர் இதன் பின்னால் சொல்லப்படும் ஏற்பாடுகளை கவனிக்கவேண்டும் :—

1. பாதைக்காரர்களுக்கும் கரத்தைக்காரர்களுக்கும் உப்பு நிறுத்து ஏற்றுமதிபண்ணிக்கொடுக்க 1,000 அந்தர் உப்புக்கு என்ன வீதம் வேணுமென்று கேள்விக்காரர் வெவ்வேறாய் விவரித்துக் காட்டவேண்டும்.

2. போதிய கூலி ஆள்களும் கரத்தைகளும் கூலிக்குப் பிடித்து நாள் ஒன்றுக்கு 2,000 அந்தர் உப்பு நிறுத்து ஏற்றுமதிபண்ணிக்கொடுக்க கேள்விக்காரர் ஆயத்தமாயிருக்க வேண்டும்.

3. ஒவ்வொரு கேள்விக்காரரும் கேள்வி கேட்க முதல் எந்தக் கச்சேரியிலாவது ரூபாய் 500 ஒடுக்கவேண்டும் ; அவ்விதமே காசு கட்டாத ஒரு கேள்வியாவது ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. கொந்திறுத்தைச் சரியாக நடப்பிக்கிறதற்கு 1,000 ரூபாய்கொண்ட சடுதிப்புப்பெற்ற பிணை கொடுக்க அல்லது பொருத்த உடன்படிக்கைபண்ணிக் கொள்ளத் தவறினால், இந்தக் கட்டின பணம் கொவற்ணமேந்துக்காக பறிமுதலாக்கப்படும். பறிமுதலாக்கப்படாத கட்டின பணம் கேள்விக்காரருக்கு திரும்பக்கொடுக்கப்படும்.

4. கொந்திசு அல்லது கடிதங்களைப் பெற்றுக்கொள்வதற்காக ஒவ்வொரு கேள்விக்காரன் தனக்குப் பதிலாய்ப் புத்தளத்தில் ஒரு பெயர்வழியின் மேல்விலாசத்தைக் கொடுக்கவேண்டியது.

5. இந்தக் கொந்திறுத்தைச் சரியாக நடைபெறுகிறதற்காகப் பிணைக்கு ஏற்படுகிறதாகிய இரண்டு போதிய ஆள்களால் கையொப்பமிடப்பட்டு அவர்களின் மேல்விலாசமும் எழுதப்பட்ட கடிதம் ஒவ்வொரு கேள்விப்பத்திரத்துடனும் அணைத்திருக்கவேண்டியது.

6. கேள்வியின் வீதங்களையிட்டு ஏதும் மாற்றுதல் அல்லது திருத்தங்கள்பண்ணினால், அந்த இடத்தில் கேள்விக்காரனின் கையொப்ப அடையாள மிடப்பட்டிருக்க வேண்டும்.

7. கேள்விப்பத்திரத்தின் இணைப்பிரதியொன்று கொழும்பிலிருக்கும் சங்கைபோர்ந்த கணக்குக் காரியத்தலைவர் அவர்களுக்கும் அதின் மூலப்பிரதியைப் புத்தளம் உதவி ஏசன்றுத்துரை அவர்களுக்கும் அனுப்பும் சமையம் கேள்விக்காரன் தபால் வழியாக அனுப்பவேண்டும்.

8. கேள்விக்கடதாசிகள் திறக்கப்படும் அன்று ஏதும் தேவையான கருமங்களையிட்டுப் பேசிக்கொள்வதற்காகக் கேள்விக்காரர் கச்சேரியில் சமுகமாயிருக்க வேண்டியது.

9. எல்லாக் கேள்விப்பத்திரங்களையும் அல்லது எதையும் யாதாமொரு கேள்வியில்லாமல் தள்ளிப்போடுகிறதற்கு அரசாட்சியாருக்குத் தத்துவமுண்டு.

எஸ். எம். பி. வெந்தர்கோன்,
உதவி அரசாட்சி ஏசன்றுத்துரைக்காக.

புத்தளம் கச்சேரி,
1914 ம் ஆண்டு மாசிமீ 17 ந் தேதி.

---

[Tenders for transporting Salt into Government Stores, Puttalam.]

"உப்பு ஏற்றுமதிபண்ணிக் கொவற்ணமேந்தின் புத்தளம் குதங்களில் நிறுத்துக்கொடுக்கிறதற்கென்று" மேல் உரையில் எழுதி முத்திரிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களை உடன்படிக்கைபண்ணிக்கொள்ள விருப்பமுள்ளவர்களிடமிருந்து புத்தள உதவி கொவற்ணமேந்து ஏசன்றுத்துரை அவர்களால் 1914 ம் ஆண்டு பங்குனிமாதம் 16 ந் திகதி 1 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும், அஃதாவது :—

புத்தளம், பச்சகட்டி, முந்தல் மேல்கரை, கீழ் கரை உப்பளங்களில் 1913 ம் ஆண்டு பெரும்போகத்தில் சேர்க்கப்பட்டிருக்கும் ஏறக்குறைய 70,000 அந்தர் உப்பை புத்தளத்திலிருக்கும் உப்பு களஞ்சியங்களுக்கு ஏற்றுமதிபண்ணி நிறுத்துக் குவிக்கும் பணிவிடைக்காக.

கேள்விக்காரர்கள் இதன் பின்னால் சொல்லப்படும் ஏற்பாடுகளைக் கவனிக்கக்கடவர்கள் :—

1. சாக்குகளுக்கு வாய்கட்டி ஏற்றுமதிபண்ணிக்கொண்டுவந்து குதத்தில் நிறுத்து நிறைத்துக்கொடுக்கிறதற்கு 1,000 அந்தருக்கு என்ன வீதமென்றும் விபரித்துக் காட்டியிருக்க வேண்டியது.

2. கேள்விக்காரன் நாளொன்றுக்கு 1,450 அந்தர் நிறுத்து ஒப்புக்கொடுக்க வேண்டும். அப்படியே கேள்விக்காரன் நிறைவேற்றத் தவறினால், தவறின நாளைக்கு புத்தளம் உதவி ஏசன்றுத்துரையுடைய பிரியப்படிக்கு ரூபாய் பத்து தெண்டனை விதிக்கப்படும்.

3. மேற்குறித்த வேலை 1914 ம் ஆண்டு சித்திரைமாதம் 1 ந் திகதி வரையில் துவக்கப்படல் வேண்டும்.

4. ஒவ்வொரு கேள்விக்காரரும் கேள்விகேட்க முதல் எந்த கச்சேரியிலாவது ரூபா 250 ஒடுக்க வேண்டும். அவ்விதமே காசு கட்டாத ஒரு கேள்வியாவது ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கொந்திறுத்தைச் சரியாக நடப்பிக்கிறதற்கு 1,000 ரூபாய்கொண்ட சடுதிப்புப்பெற்ற பிணைகொடுக்க அல்லது பொருத்த உடன்படிக்கைபண்ணிக்கொள்ளத் தவறினால், இந்தக் கட்டின பணம் கொவற்ணமேந்துக்காகப் பறிமுதலாக்கப்படும். பறிமுதலாக்கப்படாத கட்டின பணம் கேள்விக்காரருக்குத் திரும்பக் கொடுக்கப்படும்.

5. கொந்தீசு அல்லது கடிதங்களைப் பெற்றுக்கொள்வதற்காகக் கேள்விக்காரன் தனக்குப்பதிலாய்ப் புத்தளத்தில் ஓர் பெயர்வழியின் மேல்விலாசத்தைக் கொடுக்கவேண்டியது.

6. இந்தக் கொந்திறுத்தைச் சரியாக நடைபெறுகிறதற்காகப் பிணைக்கு ஏற்படுகிறதாகிய இரண்டு போதிய ஆள்களால் கையொப்பமிடப்பட்டு அவர்களின் மேல்விலாசம் எழுதப்பட்ட ஒரு கடிதமும் ஒவ்வொரு கேள்விப்பத்திரத்துடனும் அணைத்திருக்க வேண்டியது.

7. கேள்வியின் வீதங்களையிட்டு ஏதும் மாற்றுதல் அல்லது திருத்தங்கள்பண்ணினால் 'அந்த இடத்திலே கேள்விக்காரனின் கையொப்ப அடையாள மிடப்பட்டிருக்க வேண்டும்.

8. கேள்விப்பத்திரத்தின் இணைப்பிரதியொன்று கொழும்பிலிருக்கும் சங்கைபோர்ந்த கணக்குக்காரியத்தலைவர் அவர்களுக்கும் அதின் மூலப்பிரதியை புத்தளம் உதவி ஏசன்றுத்துரைக்கும் அனுப்பும் சமயம் கேள்விக்காரன் தபால் வளியாக அனுப்பவேண்டும்.

9. கேள்விக்கடதாசிகள் திறக்கப்படும் தினமன்று ஏதும் தேவையான கருமங்களையிட்டுப் பேசிக்கொள்வதற்காகக் கேள்விக்காரர் கச்சேரியில் சமுகமாயிருக்கவேண்டியது.

10. பிணை உடன்படிக்கை கடுதாசிகள் சரிபிழை பார்க்கும் முடியின் தரணியின் சிலவுகள் அனுகூலப்படும் கொந்திறுத்துக்காரனால் கொடுக்கப்படவேண்டும்.

11. உப்பு கொட்டுகள் கட்டியிருக்கும் புட்டிகளுக்கு மேல் கரத்தைகளை விடக்கூடாதென்பதை கொந்திறுத்து கேள்விக்காரர் கவனிக்கவேண்டியது.

எஸ். எம். பி. வெந்தர்கொன்,
உதவி அரசாட்சி ஏசன்றுக்காக.

புத்தளம் கச்சேரி,
1914 ம் (வரு) மாசிமீ 17 ந் வ.

---

[Tenders for building Government Schools at Iranai Iluppaikkulam, Mannar District.]

ஒப்பந்த அறிவித்தல்.

இரணை இலுப்பைக்குளத்தில் அவ்வூர் பொலிஸ் தலைமைக்காரனால் குறிக்கப்படு மோரிடத்தில் கொவர்ண்மேந்து பள்ளிக்கூடமும் உபாத்தியாயருக்கு வீடுமாக உபயோகமாகும்படி ஓர் கட்டிடம் கட்டப்படவேண்டியிருப்பதால், ஒப்பந்த கேள்விப்பத்திரங்கள் 1914 ம் ஆண்டு பங்குனிமாதம் 10 ந் திகதி முற்பகல் 12 மணி வரைக்கும் மன்னார் கச்சேரியில் உதவி ஏசன்றுத்துரையவர்களால் வாங்கப்படும் கேள்விப்பத்திரங்கள் முத்திரை வைக்கப்பட்டு உறையின் மேற்பக்கத்தில் "இரணை இலுப்பைக்குள பள்ளிக்கூடம்" என்று எழுதப்பட்டு மிருக்கவேண்டும்.

இக்கட்டிடம் எருக்கலம்பிட்டி விடத்தல்தீவு முதலிய இடங்களிலுள்ள கொவர்ணமேந்து பள்ளிக்கூடங்களின் சாயலாகவே இருக்கவேண்டும். இக்கட்டிடம் 60 அடி நீளமும் 18 அடி அகலமும் இரு அந்தங்களில் 18 அங்குல கனமுள்ள சுவர்கள், சுவர் தீராந்திவரைக்கும் கட்டப்பட்டதாயுமிருக்கவேண்டும். சுவர்கள் நல்ல செங்கல் கற்களினால் கட்டப்பட வேண்டும். முகடு சடவக்கை என்னும் மரத்திலிருந்து அரிந்தெடுக்கப்பட்ட மரங்களால் மூட்டப்பட்டு கான் ஓடுகளால் வேயப்பட்டு தரையிலிருந்து 7 அடி உயரமும் 18 அங்குலச் சதுரமும் 9 அடி 6 அங்குல இடைவெளியுமுள்ள கற்றூண்களில் வைக்கப்பட்டு பாலமர ஊசிக்கால் தீராந்திகளினால் தாங்கப்பட்டு மிருக்கவேண்டும். தூண்களின் இடைவெளிகள் 1 அடி கனமும் 3 அடி உயரமுமான அரைச்சுவர்களால் அடைக்கப்பட வேண்டும். ஒரு அந்தச் சுவரிலிருந்து 18 அடி தூரத்தில் தடுத்து முழுச்சுவர்களால் அடைத்து இரண்டு யன்னல்களும் ஒரு கதவும் வைத்து உபாத்தியாயருக்கு ஓர் அறை கட்டவேண்டும்.

ஒரு பக்கத்தின் தாவாரத்திலிருந்து இறக்கி 12 அடி நீளமும் 6 அடி அகலமுமான ஓர் சமையலறை கட்டப்பட்டு இதற்கு ஓர் யன்னலும் ஒரு கதவும் வைக்கப்படவேண்டும். கட்டிடங்கள் முழுதும் சாந்துபூசப்பட்டு வெள்ளையடிக்கப்படவும் வேண்டும். இரண்டு கிறுதிபோடப்பட்ட கேற்று வாசல்களும் வைக்கப்படவேண்டும். இதற்குத் தேவைப்பட்ட மரங்கள் தீர்வையின்றி வெட்டிஎடுக்க உத்தரவு கொடுக்கப்படும்.

தளம் சுற்றியிருக்கும் தரைக்கு ஓர் அடிக்கு உயரமாய் களிமண்ணால் போடப்படவேண்டும். சகல வேலைகளும் உதவி கவர்ண்மேந்து ஏசன்றுத்துரையவர்களின் திருப்திக்கு 1914 ம் ஆண்டு பிரட்டாசிமாசம் முடியுமுன் செய்து முடிக்கப்படவேண்டும். மேற்சொல்லிய திகதிக்கு முடிக்கத் தவறினால் ஒவ்வொரு கிளமைகளுக்கும் ரூபாய் 20 அபராதம் இறுக்கவேண்டும்.

இன்னும் தேவையான விபரங்கள் மன்னார் கச்சேரியில் பெற்றுக்கொள்ளலாம்.

ஒப்பந்த கேள்விப்பத்திரங்கள் ஒவ்வொன்றுக்கும் 10 ரூபாய் கட்டி பெற்றுக்கொள்ளலாம். ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தகாறன் அப்படி ஏற்றுக்கொள்ளப்பட்ட திகதி துவக்கம் ஏழு நாளைக்குள் 250 ரூபாய் பிணைகட்டவேண்டும்.

சீ. எச். ஜோன்ஸ்,
உதவி கவண்மேந்து ஏசன்று.

மன்னார் கச்சேரி,
1914 ம் ௵ மாசிமீ 24 ந் தேதி.

---

**Notice under "The Excise Ordinance, No. 8 of 1912."**

1912 ம் ஆண்டின் 8 ம் இலக்க கள்ளு சாராய கட்டளைச்சட்டத்தின்கீழ் அறிவித்தல்.

[Closing of Foreign Liquor Taverns, Kandy.]

பிறதேசக் குடிவகை விற்குந் தவறணைகளை நீக்குதலைப் பற்றிய அறிவித்தல்.

இதனடியிற் காணும் அட்டவணையிற் குறிக்கப்பட்டிருக்கும் பிறதேசக் குடிவகை தவறணைகளை 1914 ம் ௵ அக்டோபர்மீ 1 ந் திகதி தொடக்கம் நீக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறதென இத்தாலறிவிக்கப்படுகிறது.

2. இந்தத் தவறணைகள் நீக்குதலைப்பற்றி 1914 ம் ௵ ஏப்பிரல்மீ 17 ந் திகதி வரைக்கும் எழுத்துமூலத்தில் யாதாயினும் விண்ணப்பத்தை நான் ஏற்றுக்கொள்ளுவேன். மேலும், அத்திகதியில் கண்டிக் கச்சேரியில் 12 மணிக்கும் 4 மணிக்குமிடையில் எனக்குச் செய்யும் யாதாயினும் வாக்குமூல விண்ணப்பத்தையும் நான் ஏற்றுக்கொள்வேன்.

ஜீ. எஸ். செக்ஸ்ற்றன்,
அரசாட்சி ஏஜன்று.

கண்டிக் கச்சேரி,
1914 ம் ௵ பெப்ரவரிமீ 20 ந் வ.

அட்டவணை.

1. கண்டி திருக்கோணமலைத் தெருவில் 328 ம் இலக்க வீட்டில் இப்போ இருக்கும் தவறணை உத்தரவுபெற்றவர் ஆர். டீ. ஏ. பெரேரு.

2. கண்டி கொழும்புத் தெருவில் 223 ம் இலக்க வீட்டில் இப்போ இருக்கும் தவறணை உத்தரவுபெற்றவர் காஸ்பார் சந்தியாகு புறணந்து கர்வாலியோ.

3. கண்டி காசிள்கில் தெருவில் 107 ம் 108 ம் இலக்க வீட்டில் இப்போ இருக்கும் தவறணை உத்தரவுபெற்றவர் எஸ். பீ. விசயசிங்க.

---

[Rinderpest at Goradiyakumbura in Mahapalata Korale, Badulla District.]

ஊவா மாகாணம் வதுளை வருமான இறைக்குறிச்சியிலிருக்கும் பிரதான தலைமைக்காரனுடைய பிரிவாகிய உடுகின்ட பகுதியின் மகாபலாத்தைக் கோறளையிலுள்ள கோருடியகும்புறையில் மாட்டுநோய் பரம்பியிருத்தலால், பின்னாற் காணப்படும் எல்லைகளுக்குட்பட்ட மேற்சொல்லிய கோறளை 1909 ம் ஆண்டின் 25 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின் 5 ம் பிரிவின்படி நோயுள்ள இடமென்று இத்தால் விளம்பரப்படுத்தப்படுகின்றது.

மகாபலாத்தைக் கோறளையின் எல்லைகளாவன :—
வடக்கு-மகாஓயாவும் கொந்தைகெலகப்பல்லவும்.
தெற்கு-கப்புத்தளை சறுவதனைலைவத்தையும் கனுகலையும்.
கிழக்கு-வின்றனுவெவ்வவும், மக்குல்லைகென்னவும்.
மேற்கு-குடஓயாவும் மகாஓயாவும்.

இந்தப்பிரசித்தம் 1914 ம் ௵ மாசிமீ 19 ந் திகதி தொடக்கம் பெலப்புள்ளதாகும்.

ஜே. ஏ. மேபின்,
ஊவா மாகாண அரசாட்சி ஏசன்றுக்காக.

வதுளைக் கச்சேரி,
1914 ம் ௵ மாசிமீ 19 ந் வ.

---

[Supreme Court Criminal Sessions for Chilaw and Puttalam at Colombo.]

இலங்கைத்தீவிற் சங்கைபோந்த சுப்பிறீங் கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது : கொழும்பு நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிறீங் கோட்டாரால் சிலாபம் புத்தலம் டிஸ்திறிக்குகளைச்சேர்ந்த கிறிமினெல் வழக்குவிசாரணை, 1914 ம் ஆண்டு பங்குனிமாதம் 20 ந் திகதியாகிய வெள்ளிக்கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும்.

ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்களெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக்கடவர்கள்.

இங்ஙனம்,
எஸ். டீ. சமறசிங்க,
பிஸ்காலுக்காக.

குருணாகல் பிஸ்கால் கந்தோர்,
1914 ம் ௵ மாசிமீ 20 ந் வ.

---

[Supreme Court Criminal Sessions for Ratnapura at Colombo.]

இலங்கைத்தீவிற் சங்கைபோந்த சுப்பிறீங் கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது : கொழும்பு நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிறீங் கோட்டாரால் இரத்தினபுரி டிஸ்திறிக்கைச்சேர்ந்த கிறிமினெல் வழக்குவிசாரணை, 1914 ம் ஆண்டு பங்குனிமாதம் 20 ந் திகதியாகிய வெள்ளிக்கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும்.

ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்களெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக்கடவர்கள்.

இங்ஙனம்,
ஆர். என். தேன்,
பிஸ்கால்.

இரத்தினபுரி பிஸ்கால் கந்தோர்,
1914 ம் ௵ மாசிமீ 20 ந் வ.

---

## UNOFFICIAL ANNOUNCEMENT.

தொழிலுக் குட்படாதவரின் அறிவித்தல்.

[M. D. Charles.]

கொழும்பு டிஸ்திறிக்கைசேர்ந்த சீனு கோறளை தாரியா கங்கபடபத்துவா ஹறும்மஹற மாபும்ளகே டொன் சார்லிஸ் பீனு பெரெரா ஆகிய நான் 1907 ம் ஆண்டு 1 ம் நிம்பர் கட்டளைச்சட்டத்தின் 1-B என்னும் செடுலின் றூல் 2 படி கண்டி டிஸ்திறிக்கில் சிங்களப் பாஷையில் பிரசித்த நொத்தாரிஸ்ஆக வேலைபார்ப்பதற்கு இற்றைக்கு மூன்று மாதத்தின்பின் பதிவுகந்தோர்த் தலைவர் அவர்களிடம் உத்தரவு கேட்பேன் என்று இத்தால் அறிவித்தல் கொடுக்கிறேன்.

எம். டி. சார்ல்ஸ்.

ஹறும்மஹற, 1914 ம் ஆண்டு பெப்ரவரிமீ 9 ந் வ.

H. C. COTTLE, GOVERNMENT PRINTER, COLOMBO, CEYLON.